# நாட்டைக் காக்கும் பூங்குழலி என்னும் சிங்கப் பெண்-

**அருள்முனைவர் இ.அல்போன்சாள்,**
**உதவிப்பேராசிரியை,**
**ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி,**
**பெரியகுளம்,தேனி.**

**3**

**கதைச் சுருக்கம்**

பொன்னியின் செல்வன் கதை மாந்தர்களிலத் பூங்குழலி தியாகவிடங்கரின் மகள். சேந்தன் அமுதனின் அத்தை மகள்.படகோட்டி முருகையனின் தங்கை. சேந்தன் அமுதன் விரும்புபவள். கோடிக்கரை குழகர் கோயிலில் தரிசனத்திற்குச் சென்றவள் இரவாகவே பட்டரும் உடன் வருவதாகக் கூறியதால் கோவிலின் வெளியே காத்திருக்கிறாள்.அந்நேரம் குதிரையில் வந்தியத்தேவன் வைத்தியர் மகனுடன் வருகிறான். பூங்குழலி வந்தியத்தேவனைப் பார்க்க அவனும் பார்க்கிறான்.தேங்காய் கீற்றைக் கடித்துக் கொண்டே பார்க்கிறோம் என்று உணர்ந்தவள் வெட்கி ஓடுகிறாள். வந்தியத்தேவன் பூங்குழலியைப் பிடிக்க ஓடியவன் புதைமணலில் மாட்டிக் கொள்கிறான். பூங்குழலி காப்பாற்றுகிறாள்.

இலங்கையில் பெரும் படையுடன் போரிட்டுக் கொண்டிருக்கும் அருள்மொழிவர்மருக்கு சோழ இளவரசி குந்தவை தேவி ஓலை ஒன்றை வந்தியத்தேவனிடம் கொடுத்தனுப்புகிறாள். கோடியக்கரை சென்று சேர்ந்தவன் மீண்டும் பூங்குழலியை சந்திக்கிறான். படகோட்டும் திறமைசாலியான அவளின் படகில் இலங்கை செல்கிறார்கள்.

சேந்தன் அமுதன் வந்தியத்தேவனுக்குப் பெரிதும் உதவுகிறான். பூங்குழலி இளவரசர் அருள்மொழிவர்மனிடம் காதல் கொள்கிறாள் இளவரசர் அருள்மொழிவர்மனும் பூங்குழலியிடம் காதல் கொள்கிறார்.இருவரும் ஒருவருக்கொருவர் வெளிப்படுத்தப்படாத காதலாக இருந்துவிடுகிறது.

சோழ நாட்டிற்காக எவ்வளவோ தியாகம் செய்கிறாள்,சேவை செய்கிறாள்.இறுதியில் கொடும்பாளுர் இளவரசி வானதிக்காக தன் காதலை வெளிப்படுத்தாமல் துறந்துவிட்டு தன்னை விரும்பிய அத்தை மகன் சேந்தன் அமுதனை மணந்து கொள்கிறாள்;.இருவரும் முடிசூட்டப்பட்டு அரசாள்கிறார்கள்.

கதாபாத்திரத்தின் இயல்பு

படகோட்டி குடும்பத்தில் பிறந்தவள்,காண்போர் மயங்கும் அழகும் புயலிலும் மழையிலும் ஆழ்கடலில் தனித்தும் படகோட்டும் திறனும் மிக்கவள்.பாடல் புனைந்து பாடும் கவிதாயினி.;. கள்ளங் கபடமற்றவள்.

விசித்திரப்பெண்

பொன்னியின் செல்வன் கதை மாந்தர்களில் பூங்குழலி தியாகவிடங்கரின் மகள் கோடிக்கரை குழகர் கோயிலில் தரிசனத்திற்குச் சென்றவள் இரவாகவே பட்டரும் உடன் வருவதாகக் கூறியதால் கோவிலின் வெளியே காத்திருக்கிறாள்.அந்நேரம் குதிரையில் வந்தியத்தேவன் வைத்தியர் மகனுடன் வருகிறான். பூங்குழலி வந்தியத்தேவனைப் பார்க்க அவனும் பார்க்கிறான்.தேங்காய் கீற்றைக் கடித்துக்

கொண்டே பார்க்கிறோம் என்று உணர்ந்தவள் வெட்கி ஓடுகிறாள். வந்தியத்தேவன் பூங்குழலியைப் பிடிக்க ஓடியவன் புதைசேற்றில் மாட்டிக் கொள்கிறான். தன் பலமெல்லாம் உபயோகித்து வெளியே வர முயற்சித்தும் பலனில்லை எனவே, ''இந்த அபாய வேளையில் அந்த விசித்திரப்பெண் வந்து கை கொடுத்து காப்பாற்றினால் தான் உண்டு. வந்தியத்தேவன்,ஐயோ நான் செத்தேன்! சேற்றில் விழுந்து சாகப்போகிறேன்.எனக்குக் கை கொடுத்து உதவி செய்து காப்பாற்றுவார் யாருமில்லையா !" என்று கத்தினான்.

அந்த குரல் பூங்குழலியின் காதில் விழுந்தது.அவனுக்கு நேர் எதிரே சற்று தூரத்தில் ஓடிக் கொண்டிருந்த பூங்குழலி நின்றாள்.ஒரு கணம் தயங்கினாள். வந்தியத்தேவனுடைய அபாயமான நிலையைப்பார்த்துத் தெரிந்து கொண்டாள்"(பொன்னியின் செல்வன் இரண்டாம் பாகம் ப.13) உடனே பாதி மூழ்கிய நிலையில் கிடந்த படகில் துடுப்பை வலித்து காற்றினும் கடிந்து காப்பாற்றுகிறாள்.

கள்ளங் கபடமற்றவள்

வந்தியத்தேவன் பேச்சுக் கொடுத்ததிலிருந்தும் அவள் செய்கையிலிருந்தும், "இவள் கள்ளங் கபடம் அற்ற பெண்.எப்படியாவது சிநேகம் வைத்துக் கொள்வது நல்லது. பூங்குழலி! உன்னிடம் உண்மையைச் சொல்லி;விடுகிறேன். மூலிகை கொண்டுபோக நான் வந்திருப்பதாகச் சொன்னேனே,அது பொய்தான் ! மிக முக்கிய இரகசிய காரியத்திற்காக நான் இலங்கைக்குப் போகிறேன். அதை உன்னிடம் சொல்லுகிறேன்." என்றான். ;"(; பா-2 ப.21)

படகோட்டி

இலங்கைக்குப் போக வந்தியத்தேவனுக்கு படகு தேவைப்படவே படகு தள்ள ஆள் இல்லை என்று தியாகவிடங்கரையர் சொல்லி விட்டு,"இந்த பகுதியிலேயே பூங்குழலியைப்போல் சாமர்த்தியமாகப் படகு தள்ளத் தெரிந்தவர்கள் வேறு யாரும் இல்லை.இலங்கைக்கு எத்தனையோ தடவை போய் வந்திருக்கிறாள்.அவளிடம் நான் சொல்லுகிறேன்:நீயும் கேட்டுப்பார் ! ";"(பா-2, ப.26)

களைப்பால் கண்ணயர்ந்தான்.திடீரென்று கதவு திறக்கவே விழித்தவன் அவளை நடுநிசியில் பின் தொடர்ந்தான். கொடிய இருள் அத்துடன் அடர்ந்த புதர் காடுகளின் ஊடே போனவளை மிகுந்த சிரமத்தோடே தூரத்தில் பின் தொடர்ந்தான்…பயத்தில் திரும்ப நினைக்கையில்,

"பெண்ணின் குரல், ஒரு விம்மல் சத்தம். பிறகு இந்தப் பாடல்:-

அலை கடலும் ஓய்ந்திருக்க அகக் கடல் தான் பொங்குவதேன் ?
நிலமகளும் துயிலுகையில் நெஞ்சமும் தான் விம்முவதேன் ?.. ;"(பா-2, ப.29)

பாடலைக் கேட்டவன் திரும்பி நடந்தான்.பாடல் அவனைத் தன் வயமிழக்கச் செய்தது. பூங்குழலிக்கு எதிரில் சென்று நின்றான். நீ உன் காதலர்களைக் காட்டுவதாகச் சொன்னாயே, காட்டு என்றான்.

இயற்கை நண்பர்கள்

வந்தியத்தேவன் திரும்பிப் பார்த்தான். பயத்தில் அவனுடைய வயிற்றிலிருந்து குடல்கள் கிளம்பி மார்யையும் தொண்டையையும் அடைத்தன.பல நூறு அக்கினிக் குண்டங்கள் தோன்றி நெருப்புப் பிண்டங்களாக நின்றன.சில புதிது புதிதாகக் கிளம்பின.

"ஒரு பிரமாண்டமான கரிய இருள் நிறங்கொண்ட ராட்சதன்.தனியாகத் தலை ஒன்று இல்லாமல் வயிற்றிலேயே வாய் கொண்ட கபந்தனைப் போன்ற ராட்சதன்.ஆனால் அவன் வயிற்றில் ஒரு வாய்

அல்ல: அநேக வாய்கள்.அந்த வாய்களை அடிக்கடி திறந்து மூடினான்.திறக்கும் போது வயிற்றிலிருந்து தீயின் சுவாலை வாய்களின் வழியாக வெளியே வந்தது.மூடும் போது மறைந்தது.” ; (பா-2, ப.31) பீதியில் வந்தியத்தேவன் உடம்பிலிருந்து இரத்தம் கசிவது போல இருந்தது.

பூங்குழலி சிரித்துக் கொண்டே, இந்த கொள்ளிவாய் பிசாசுகள் தான் என் காதலர்கள் என்றாள்.

கொள்ளிவாய் பிசாசுகள்

வந்தியத்தேவன் பயத்தைக் விட்டுவிட்டு அறிவோடு சிந்தித்தான்.

“பூமிக்குள்ளே இருந்து கந்தகம் கலந்த வாயு வெளியில் வரும் போது,நெருப்புப் பிழம்பு வருவது போலிருக்கும்….இந்த இயற்கைத் தோற்றத்தைக் கண்டு, அறியாத மக்கள் பீதி பயப்படுவார்கள.; கொள்ளிவாய் பிசாசு என்று பயங்கரப் பெயர் கொடுத்துப் பீதி அடைவார்கள்” (பா-2, ப.32) வந்தியத்தேவன் பூங்குழலியை அழைத்தான்.அவள் அழுது கொண்டிருந்தாள்.

கற்பின் திண்மையள்,பத்திரகாளி

“மயிர் நீப்பின் வாழா கவரிமா” (தமிழிலக்கியத்தில் அறம் ப.11)

பூங்குழலி படகோட்ட சம்மதித்து இருவரும் இலங்கைக்குப் பயணம் தொடர்ந்தனர். வந்தியத்தேவன் பூங்குழலியைப் பற்றிய கனவில் மீண்டவன் ஒரு பாடல் பாடச் சொல்கிறான்.பாடினால் என்ன பரிசு தருவாய் என்று கேட்கவே உன் கன்னத்தில் என்றவனிடம், தன் மடியிலிருந்த கூரிய கத்தியை எடுத்தவள் ஓங்கிக் கொண்டே,

“ இதோ பார் ! இந்த பாய்மரத்துக்கு இப்பால் ஒரு அணுவளவு நீ வந்தாலும் உன்னை இந்த கத்தியால் குத்திவிடுவேன்.” என்றாள். (பா-2, ப.36) மறுநாள் பெரியவரிடம் பேசும்போது அவர் வாய்ச் சொல் நேற்றைய கனவை உறுதிப்படுத்தியதை நினைத்து வந்தியத்தேவன் சிலிர்த்தான்.

பூங்குழலி உனக்கு மிக நன்றி

கடல் என்றாலே வந்தியத்தேவனுக்கு பயம் .காலையில் தன் பயம் போக்க கடலில் குளிக்கையில் அவள் கரையில் இருந்த அவன் இடைச் சுருளை எடுத்துக் கொண்டு ஓடி கண்ணை விட்டு மறைந்து விடுகிறாள்.அவளைத்தேடி பூங்குழலி ! பூங்குழலி ! என்று தேடி அலைந்தவன் மரத்திலிருந்து எதோ விழுந்ததைப் பார்த்தவன் ஓலை,பொற்காசுகள் பத்திரமாய் இருக்கக் கண்டான்.

மரத்திலிருந்த அவளிடம் கோபம் கொண்டான்.அவள் அவனை மரத்தில் ஏறி பார்க்கச் சொன்னாள்.தன்னைப் பிடிக்க வந்த பளுவேட்டரயர்களின் வீரர்கள் குதிரையில் வாள்,வேல்களோடு விரைவதைப் பார்க்கிறான். “பூங்குழலி ! என்னைப் பேராபத்திலிருந்து காப்பாற்றினாய் .உனக்கு மிக மிக நன்றி! என்றான்.

தொடர் விண்ணப்பம்

பெண்ணே ! நீ எனக்கு எவ்வளவு பெரிய உதவியைச் செய்திருக்கிறாய் என்பதைச் சொல்லி முடியாது.மிச்ச உதவியையும் நீ தான் செய்ய வேண்டும்..” என்றான்.(பா-2, ப.44) என் உயிர் உள்ளளவும் மறக்க மாட்டேன் என்றான்.

இலங்கைக்குப் போக வந்தியத்தேவனுக்கு படகு வலிக்க சம்மதித்தவள் இரவு சாமம் வரை அவனைப் பாதுகாப்பாக இருக்கச் சொல்கிறாள்.

ஆயுதம் மீனின் வால்

அவன் கையில் ஆயுதம் ஏதுமில்லை என்று சொல்லவும் மண்டபத்தில் கிடந்த ஆயுதம் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள். "அது ஒரு விசித்திரமான ஆயுதம்.இருபுறமும் வாள் போன்ற கூர் கூரான முட்கள் இருந்தன, முட்கள் இரும்பைவிடக் கெட்டியாயிருந்தன.இந்திரனுடைய வச்சிராயுதம் இப்படித்தான் இருக்கும் போலும் ! இது என்ன ஆயுதம்? எதனால் செய்தது? என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இது ஒரு மீனின் வால் ! இந்த மண்டபத்தில் குடியிருந்த சிறுத்தை என் மீது பாய வந்த போது இதனால் அடித்துத் தான் கொன்றேன் !" (பொன்னியின் செல்வன் இரண்டாம் பாகம் ப.48)என்றாள் பூங்குழலி.

சமுத்திர குமாரி

இலங்கைக்குப் போகும் போது படகில் பேச்சுக்கிடையே வந்தியத்தேவனிடம் சக்ரவர்த்தியின் இளைய குமாரரை பொன்னியின் செல்வர் என்று அழைப்பது போல் எனக்கு இன்னொரு பெயர் சமுத்திர குமாரி.யாரும் சொல்லவில்லையா என்று வந்தியத்தேவனிடம் கேட்டாள்;

நீ யார் என்று தெரிந்து தான் படகு வலிக்க சம்மதித்தேன் என்றதும் படகைத் திருப்பு, இல்லை கடலில் குதிக்கப் போகிறேன். எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாளே என்று சந்தேகித்து வந்தியத்தேவன் பயந்து கடலில் குதித்தான்.

பூங்குழலி காப்பாற்றுகிறாள்

வெளியே வருவான் என்று காத்திருந்தும் வரவில்லை என்றதும் பூங்குழலி உள்ளம் வேகமாக இயங்கியது. கடலில் குதித்தவன் நீந்தத் தெரியாது மூழ்குகையில் கடலில் பாய்ந்து வந்தியத்தேவனைக் காப்பாற்றுகிறாள்.

அபூர்வ மங்கை

கடலிலிருந்து காப்பாற்றப்பட்ட வந்தியத்தேவன் கண்விழித்த போது,

" வாரிதியும் அடங்கி நிற்க மாருதமும் தவழ்ந்து வரக்
காரிகையென் உள்ளந்தனிலே காற்றுச் சுழன்று அடிப்பதுமேன் ?
அலை கடலும் ஓய்ந்திருக்க அகக் கடல் தான் பொங்குவதேன் ?" (பா-2,ப.61)

என்று சோக கீதத்தைப் பாடிக் கொண்டு படகு தள்ளிக் கொண்டிருக்கிறாள்.அவளை சந்தேகித்ததை நினைத்து வெட்கப் படுகிறான்.

பின்னர் பொன்னியின் செல்வர் எங்கிருக்கிறார் என அறிந்து வருவதாகக் கூறுகிறாள். பொன்னியின் செல்வர் பற்றிப் பேசும் போது அவள் கண்கள் ஒளிர்வதைக் காண்கிறான்.

நன்றிக்கடன்

இலங்கை சென்றடையவே வந்தியத்தேவன்,

" நீ எனக்குச் செய்த உதவி மிகப் பெரியது. எனக்கு மட்டும் உதவவில்லை:சோழ சாம்ராச்சியத்திற்கே உதவி புரிந்திருக்கிறாய். இதற்குப் பதிலாக நான் ஏதாவது செய்யாவிட்டால் என் மனம் நிம்மதி அடையாது" என்றான். உன் பணி முடிந்த பின் பொன்னியின் செல்வரிடம்,

"சமுத்திர குமாரியை ஞாபகம் இருக்கிறதா ? என்று கேள். ஞாபகம் இருக்கிறது என்று அவர் சொன்னால்,அவள் தான் எனக்குப் படகு வலித்துக் கொண்டு வந்து இலங்கையில் இறக்கி விட்டாள் என்று கூறு !" (பா-2, ப.71) என வந்தியத்தேவனை பூங்குழலி அனுப்பி வைத்தாள்.

காதல் மனம்

வந்தியத்தேவனுக்கு பொன்னியின் செல்வனை சந்திக்க எல்லா உதவிகளையும் செய்த பூங்குழலி ,பொன்னியின் செல்வனை சந்தித்த வந்தியத்தேவனிடம், சமுத்திர குமாரியை ஞாபகம் இருக்கிறது என்று அவர் சொல்லவோ கேட்கவோ இல்லையே என்று வருத்தப்படுகிறாள். "சமுத்திர குமாரி ! உனக்கு என்னை நினைவிருக்கிறதா ? "(பா-2,ப.316) என்று பொன்னியின் செல்வன் குரல் ஒலித்ததும் பூங்குழலி உள்ளம் துள்ளிக் குதித்தது.யுகம் யுகமாய் பொன்னியின் செல்வனோடு வாழ்ந்ததாக அவள் நெஞ்சம் உருகுகிறது.

பொன்னியின் செல்வன் வேண்டுதல்

"சமுத்திர குமாரி ! சற்று இப்படி அருகில் வா !" என்றார்.பூங்குழலி நெருங்கி வந்தாள்.நீ கொண்டு வந்த செய்தியால் பெரிய உதவி செய்தாய்.இன்னும் ஓர் உபகாரம் எனக்கு நீ செய்ய வேண்டும்.செய்வாயா? (பா-2, ப.326) என்றுகேட்கவே கடவுள் தம் திருக் கரங்களை நீட்டி என்னிடம் பிச்சை போடு என்று கேட்கிறாரே என்று நினைத்தவள் இதோ காத்திருக்கிறேன் என்றாள்.மீண்டும் பயணம் தொடங்கியது. இடையில் இளவரசர் யானை மீது சமுத்திர குமாரியுடன் ஏறிக்கொண்டார். இருவரும் காதல் மொழி பேசியும் நாட்டு விடயங்களைப் பற்றிப் பேசியும் யானை இறவுத் துறையை வந்தடைந்தார்கள்.

பொன்னியின் செல்வன் பூங்குழலியிடம் உன்னை எனக்கு ரொம்ப பிடிக்க காரணம்,எனக்குத் தெரிந்த ஒவ்வொருவரும் நான் அவர்கள் விருப்பம் போல் நடக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்.நீ ஒருத்தி மட்டும் என் விருப்பத்தின் படி நடக்க சம்மதித்தாய்! இந்த உதவியை என்றும் மறக்க மாட்டேன், சமுத்திர குமாரி !"(பா-2, ப.343) என்று பொன்னியின் செல்வன் சொன்னதும் விண்ணில் அவள் உள்ளம் பறக்கிறது.

அரியணையை விட மூன்று உலகங்களையும் சுற்றி வரவே விருப்புகிறேன். இயற்கையை ரசித்து,கண்டங்களை அதன் அதிசயங்களைப் பார்த்து ரசிக்க ஆசைப்படுகிறேன் என்றதும் பூங்குழலிக்கு தன்னைப் போலவே பொன்னியின் செல்வன் விருப்பங்களும் ஒத்துப் போகக் கண்டு எல்லையில்லா மகிழ்வடைகிறாள்.

இளவரசர் பொன்னியின் செல்வன் கண்களில் கண்ணீர்

பூங்குழலியின் அன்புடன் கூடிய உதவிகளை நினைத்துப் பார்க்கையில் தளர்ந்த அவளை,"இளவரசர் பூங்குழலியின் கரத்தைப் பற்றி அவளைத் தாங்குவார் போல் நடத்தி அழைத்துக் கொண்டு சென்றார்.உண்மையிலே அவளுடை கால்கள் தள்ளாடின என்பதைக் கண்டார்.அந்தப் பெண்ணின் அன்புக்கு ஈரேழு உலகிலும் இணை ஏது என்று எண்ணிய போது அவருடைய கண்களில் கண்ணீர் துளித்தது. !"(பா-2,ப.356-357)

கடலில் வந்த கரையில் வந்த பல்வேறு ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றிய பூங்குழலியின் அன்புடனான செயல்களால் சமுத்திர குமாரியின் முகம் இளவரசர் உள்ளத்தில் பெரிதாகிக் கொண்டே வந்தது.

பூங்குழலியின் வேதனை

எத்தனையோ ஆபத்தகளில் விபத்துகளில் சோழ ராச்சியத்திற்காக தன் உயிரைப் பணயம் வைத்து சேவை செய்த பூங்குழலியின் இதயம் தஞ்சை வந்த பின் சேனாதிபதி சொல்லால் சுக்குநூறாகியது. (பா-2, ப.425)

காதில் ஊற்றிய ஈயத்துளிகள்

சேனாதிபதி பூங்குழலியிடம், "இளவரசருக்கு ஏதோ உதவி செய்து விட்டபடியால்,அவர் பேரில் பாத்தியதை கொண்டாடலாம் என்று எண்ணாதே! கடலில் வலை போட்டு மீன் பிடிப்பதோடு நிறுத்திக் கொள்! "இளவரசரை வலை போட்டுப் பிடிக்கலாம் என்று ஆசைப்படாதே! சாக்கிரதை,பெண்ணே ! இனி அவர் அருகில் நெருங்கினாலும் உனக்கு ஆபத்து வரும்" (பா-2, ப.426)சேனாதிபதியின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் காதில் ஊற்றிய ஈயத்துளிகளாக பூங்குழலியை என்னவோ செய்தது.

இந்த பொல்லாத மனிதர்களின் வாயில் விழ நேர்ந்ததே.நானும் "இளவரசரும் மீனாய் பிறந்திருக்கக் கூடாதா? "சமுத்திர ராசனே! உன் அருமைப் புதல்வியை வேறு யார் கைவிட்டாலும் நீ கைவிடமாட்டாய் அல்லவா? சமுத்திர குமாரி என்று "இளவரசர் திருவாயினால் கூறியதைப் பொய்யாக்க மாட்டாயல்லவா ? "(பா-2, ப.428) என்று வேதனையில் உள்ளம் குமுற பூதத்தீவிற்குப் பயணமானாள்.

ஓடக்காரப் பெண் தானே

வந்தியத்தேவன் குந்தவை தேவியிடம் பூங்குழலியின் தன்னலமில்லா அன்பை,நாட்டுக்காற்றிய சேவைகளைச் சொல்லி ,இளவரசரை திருமணம் செய்து வைக்க கெஞ்சுகிறான் பெருமுயற்சி செய்கிறான்.ஆனால் குந்தவை தேவி,"ஓடக்காரப் பெண் தானே, சிட்டுக்குருவி என்று ஏளனமாகப் பேசி மறுக்கிறாள் (.பா-3,ப-167)

படகோட்டி காப்பாற்றுதல்

சோழநாட்டில் கலவரம் வெடிக்க இருந்தபோது அதனைத் தவிர்க்க,வந்தியத்தேவனின் ஆலோசனை ஏற்ற அருள்மொழிவர்மனைப் படகில் ஏற்றி பூங்குழலியை கோடிக்கரைக்குச் செல்லச் சொல்லவே, "பூங்குழலிஅப்போதுஏழாவதுசொர்க்கத்திலிருந்தாள்.இளவரசரைக் கடலிலிருந்துகாப்பாற்றிஅழைத்துக் கொண்டுவந்தது அவளுக்குஎல்லையில்லாதஉள்ளக் களிப்பைஅளித்திருந்தது."(பா-3-ப30)

திடீரென்று படகில் அமர்ந்திருந்த இளவரசருக்கு குளிர் காய்ச்சல்.இந்த காய்ச்சல் வந்தவர்கள் பிழைப்பது அரிது என்றார்.சொல்லிக் கொண்டிருக்கவே இளவரசருக்கு குளிர் காய்ச்சல் தூக்கித் தூக்கிப் போட்டது.

“பூங்குழலியின்கையிலிருந்துதுடுப்புதானாகநழுவிவிட்டது.உடம்பில் சீவசக்திஅடியோடுமங்கிவிட்டது.கண்களில் மட்டுமேஉயிரின் ஒளிதோன்றியது.அந்தக் கண்களினால் இளவரசரைவெறித்துப் பார்த்துக் கொண்டுநின்றாள்”(பா3-31)

இளவரசருக்குக் காய்ச்சல் வேகம் அதிகரிக்கவே திடீரென்று குதித்து எழுந்து என்னை என் தமக்கையிடம் கொண்டு போங்கள் என்று கடலில் பாய எத்தனிக்கையில்,

“பூங்குழலிஉயிர் பெற்றாள்.ஒருபாய்ச்சல் பாய்ந்துஇளவரசர் அருகில் வந்துஅவரைக் கடலில் விழாமல் தடுப்பதற்காகஒருகரத்தைப் பற்றினாள்.சுர வேகத்தினால் இளவரசர் பெற்றிருந்தமதயானையின் பலம் உடனேமாயமாய்ப் போய் விட்டது.சின்னஞ்சிறுகுழந்தையைப்போல்; ஆனார்.(பா 3,ப-32)

வந்தியத்தேவன்பூங்குழலிபற்றி, இளவரசரைப் பாதுகாப்பதில் இவளும் கவலைகொண்டவளே என்று மனதில் எண்ணிய படியே படகை வேகமாக செலுத்திச் செல்கையில் என்னை யாராவது பார்த்தால் எங்கள் கதி என்ற வந்தியத்தேவனுக்கு,

“ஐயா,என் உயிரைப் பற்றி இத்தனைநாளும் நான் இலட்சியம் செய்ததில்லை.இன்றைக்குத் தான்கவலைபிறந்திருக்கிறது.இளவரசருக்குஅபாயம் நீங்கும் வரையில் என் உயிருக்கும் ஒன்றும் வராது என்றாள்” பூங்குழலி.(பா 3,ப-36)

ஓரமாகபடகைநிறுத்தினாள்.பூங்குழலிகால்வாயின்கரைமீதேறிக்காட்டுவழியில்புகுந்துசென்றாள்.அதாவதுஅவளுடையஉடம்புசென்றுகொண்டிருந்தது. அவளுடைய உயிர் கால்வாயில் விட்டிருந்த படகிலேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தது..(பா 3,ப-36)

காவல் தெய்வம்

கோடிக்கரை குழகர் கோயிலில் நுழைந்து இறுதியாக வைத்திருந்த பிரசாதத்தையும் கொஞ்சமாய் இருந்தபாலையும் தனக்கென்று கேட்டு வாங்கி தான் உண்ணாமல் ரகசியமாக இளவரசருக்குக் கொண்டு வந்து கொடுத்துக் காப்பாற்றினாள்.

“தன்னைத் தான் நேசிப்பது போல பிறரையும் நேசி“(திரு விவிலிலியம் லூக்கா 10ஃ27)

என்பதாக பூங்குழலிதனக்குள்ளே,“இளவரசர்கொடியவிசசுரத்தினால் பீடிக்கப் பட்டிருந்தார்.அவரைச் சிறைப்படுத்திப் போவதற்குப் பழுவேட்டரையர் காத்திருந்தார்அவரைக் கொன்றுவிடுவதற்குக் கொலையாளிகள் காத்திருந்தனர். அவர்களுக்குத் துணையாகபெண்ணுருக் கொண்டநந்தினிஎன்னும் மோகினிப் பிசாசுகாத்திருந்தது. பார்த்திபேந்திரனும் அவளுடைய மாய வலையில் விழுந்துவிட்டான்.இளவரசரைத் தான் அழைத்துச் சென்றுபத்திரமாய் வைத்திருக்கலாம் என்றுஎண்ணியமறைந்தமண்டபம் கூடஇவர்களுக்குத்தெரிந்திருக்கிறது.

இவ்வளவுஅபாயங்களிலிருந்தும் இளவரசரைப் பாதுகாக்கும்; பொறுப்புதன் தலையில் சுமந்திருப்பதாகப் பூங்குழலிஉணர்ந்தாள்”. பா-3,ப-48) பத்திரமாக பல இன்னல்களுக்கு இடையே கொண்டு சேர்த்தாள்.தன்னிடமிருந்த பாலைக் கொடுக்கையில்,

“பூங்குழலிநீதானா? சோர்க்கலோகத்தில் யாரோ ஒரு தேவகன்னிகை என் வாயில் அமுதத்தை ஊற்றுவது போலத் தோன்றியது என்றார். பா 3,ப-60)

**யுகம் யுகமாய்**

சேந்தன் அமுதன் உணவுதேடிக் கிராமங்களுக்குச் சென்ற சமயங்களில் பூங்குழலி இளவரசரின் நெற்றியைத் தடவிக் கொடுத்தும் தலையைக் கோதிவிட்டும் பணிவிடைசெய்தாள். அப்போதெல்லாம் அவள் உள்ளம் பொங்கி,உடல் சிலிர்த்துபரவசநிலையிலிருந்தாள்.(பா-3,ப.70).எத்தனையோ பூர்வசென்மங்களில் அவருக்குப் பணிவிடைசெய்தது போன்ற உணர்வில் இருந்தாள். ஆயிரமாயிரம் உணர்வுகள் உள்ளத்தில் பொங்கி வெளியேறிக் கொண்டிருந்தன.

பூங்குழலியின் வினா

பூங்குழலியோடு சேந்தன் அமுதனும் படகில் செல்கையில் அரண்மனை ராசகுமாரிகள் பேரில் கோபமாகப் பேசினாள் பூங்குழலி. உடனே சேந்தன் அமுதன் அதனை விலக்கி,

"அப்படியானால் அரண்மனையில் வாழும் அரசகுமாரனைக் கலியாணம் செய்து கொள்ளவும் நீ ஆசைப்படக்கூடாது."(பா-4 ப- 114 )

நீ என்னைக் கலியாணம் செய்து கொள்வாயா ? என்று சேந்தன் அமுதன் பூங்குழலியிடம் கேட்டான்.ஏன் என்றாள் ? தான் விரும்புவதைத் தெரிவித்தான். அவளோ திருமணம் செய்துதான் வாழவேண்டுமோ என்று பதில் வினா தொடுத்தாள்.

சுந்தரச் சோழ மன்னரிடம்

பூங்குழலி இளவரசருக்கு வந்த ஆபத்துகள் நோய்,அதிலிருந்து விடுபட புத்தவிகாரம் சென்று நலமடைந்து வந்தது வரை சுந்தரச் சோழ மன்னரிடம் அரண்மனையில் அரசர் கேட்கவே கூறுகிறாள்.உடனேஅரசர்,

"எல்லாம் கேட்;ட பின்னர் சக்கரவர்த்தி,பெண்ணே! சோழகுலத்துக்கு இணையில்லாத உதவி செய்திருக்கிறாய். அதற்கு ஈடாக உனக்குச் செய்யக் கூடியது ஒன்றுமேயில்லை" (பா-4,ப-209); என்று கூறி தன் நன்றியை,பெருந்தன்மையை வெளிப்படுத்துகிறார்.

பொறாமைஅற்றவள்.

நன்றியுள்ளம்

காவிரி ஆறு கரைபுரண்டுஓடியது.; கொடும்பாளூர் இளவரசியும் வெள்ளப் பெருக்கில் அடித்துச் செல்லப்பட்டாள்.உடனே பூங்குழலி குந்தவைதேவியிடம் அனுமதி பெறுகையில் அவள் மறுத்தால் என்றுகேட்க,நான் அவளைஏற்றிவிட்டு நான் இறங்கிக் கொள்வேன் என்கிறாள். படகோட்டிச் செல்கிறாள்.காப்பாற்ற விரைந்தவள் அருகில் செல்கையில் படகிலிருந்து கவிழ்க்கப் படுகிறாள்.வானதி தப்பியவள் இவளைக் காப்பாற்ற விரைகிறாள். இருவரும் ஒருவரையொருவர் காப்பாற்ற நினைக்கின்றனர். காப்பாற்றப்பட்டபூங்குழலி,"கண்களில் நீர் மல்க உதவியை மறக்கமாட்டேன்" என்றாள் வானதியிடம். (பா-5 ப 143)

அருள்மொழிவர்மனைஆபத்திலிருந்துகாப்பாற்றியதுமட்டுமல்லாமல் மந்தாகினி என்ற ஈழத்து ஊமைராணியைப் பார்க்க அழைத்துச் செல்ல உதவுகிறாள். பூங்குழலிதன் அத்தை மந்தாகினியுடன் சுந்தரச்சோழரைக் காப்பாற்ற மிகப் பெரிய ஆபத்தை சந்திக்கிறார். பின்னர் மந்தாகினி சைகையால் அரசருக்கு ஆபத்து என்றும் தனக்கு இறுதி நெருங்கி விட்டது என்றும் கூறுகிறாள்.;.தன் அத்தை மந்தாகினியிடம் மிகுந்த அன்புடையவள்.சதிகாரர் சக்கரவர்தியைக் கொல்ல வேலெறிகையில்

பூங்குழலி குறுக்கே பாயுமுன் எல்லாம் முடிகிறது.அத்தை மந்தாகினியை நினனைந்து மிகுந்த வேதனைப்படுகிறாள்.

அத்தை மந்தாகினியின் வாழ்க்கை முடிவு என் உள்ளத்தில் வீண் ஆசைகளை மடியச் செய்தன. அமுதா நாம் இனி திருப்பணிசெய்வோம். சிலசமயம் படகில் ஏறிக் கடலில் செல்;வோம். ஈழ நாட்டின் ஓரத்தில் இனியத் தீவுகள் எத்தனையோ இருக்கின்றன. அந்தத் தீவுகளில் ஒன்றில் சிலசமயம் இறங்குவோம். அங்கே நீ ராஜவாகவும் நான் ராணியாகவும் இருப்போம். அந்த இராஜ்யத்துக்கு யாரும் போட்டிக்குவரமாட்டார்கள். அமுதா இதற்கெல்லாம் உனக்குஆட்சேபம் ஒன்றுமில்லையே? (பா 5 ப-440)

வந்தியத்தேவனின் நன்றியுள்ளம்

வந்தியத்தேவன் பூங்குழலிஅம்மை மகாராணிஆகப் போவது பற்றிக் கூறுகையில், “நன்றி பயன் தூக்கி வாழ்தல் இனிது” (த.இ.அ.ப-62) என்பதற்கேற்ப,சேந்தன் அமுதனாருக்குச் சோழசாம்ராஜ்யம் சொந்தமாவதிலே கூட எனக்குஅவ்வளவுதிருப்தி இல்லை. எனக்கு கடல் கடக்க உதவிசெய்த பூங்குழலிஅம்மை மகாராணி ஆகப் போவதிலே தான் எனக்குப் பூரிப்பு! சமுத்திரகுமாரியின் ஆசைக்கனவு இவ்வளவுவிரைவில் நிறைவேறப் போகிறது என்றுஅவரே எதிர்பார்த்திருக்கமாட்டார்!”என்றான். (பா-5-ப-535)

சேந்தன் அமுதனுடன் பூங்குழலி வாழ சம்மதிக்கிறாள் அப்போது வந்தியத்தேவன்,
அப்படிச் சொல்,பூங்குழலி! உன் தகுதியைநிலைநாட்ட இதுவேபோதுமே! தகுதியும் தகுதியின்மையும் எப்படி ஏற்படுகின்றன? பிறப்புஒக்கும் எல்லா உயிர்;க்கும். (பா-5ப
-537) என்று சொன்னான்.

அன்பின் ஆழம்

அருள்மொழிவர்மர், அவள் என் சித்தப்பாவை மனமுவந்து கல்யாணம் செய்துகொண்டாளா? என்றுகேட்டார், “அதற்குஎன்னசந்தேகம்? கோமகனே! தாங்கள் இந்தச் சோழசாம்ராஜ்யத்தின்; சக்கரவர்த்தியாகலாம். இந்தப் பூ மண்டலம் முழுவதையும் வென்றுஒரு குடை நிழலில் கொண்டு வந்துஆட்சிபுரியலாம். ஆனால் பூங்குழலி அம்மையை மட்டும் அவருடைய விருப்பத்திற்கு விரோதமாக எந்தக் காரியமும் செய்யும் படிகட்டாயப்படுத்;;த முடியாது. செம்பியன் மாதேவியின் செல்வப் புதல்வரிடம் பூங்குழலிஅம்மைகொண்டிருந்த அன்பின் ஆழத்தைநான் அறிந்துகொள்ளும் பேறுபெற்றேன்.பா-5 ப-580)என்று வந்தியத்தேவன் பூங்குழலியின் உண்மைத் தகைமையை விளக்குகிறான்.

நிறைவாக

அமரர் கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலில்; பூங்குழலியை வந்தியத்தேவன் சந்திக்கிறான். படகோட்டும் திறமைசாலியான அவளின் படகில் இலங்கை செல்கிறார்கள்.பூங்குழலி இளவரசர் அருள்மொழிவர்மனிடம் காதல் கொள்கிறாள் இளவரசர் அருள்மொழிவர்மனும் பூங்குழலியிடம் காதல் கொள்கிறார்.இருவரும் ஒருவருக்கொருவர் வெளிப்படுத்தப்படாத காதலாக இருந்துவிடுகிறது.விசித்திரப்பெணாக கள்ளங் கபடமற்றவளாக,இயற்கை நண்பர்கள் கொள்ளிவாய் பிசாசுகளை உடையவளாக, கற்பின் திண்மையள்,பத்திரகாளியாக, ஆயுதமாக மீனின்

வால் பயன்படுத்துபவளாக, காப்பாற்றி சமுத்திர குமாரி என்று பூங்குழலி பொன்னியின் செல்வனால் பெயர் பெற்றவளாக அபூர்வ மங்கையாக, நன்றிக்கடன் கொண்டவளாக,காதல் மனம் பொன்னியின் செல்வனிடம் கொண்டவளாக, இளவரசரே வேண்டுதல்செய்யக்கூடியவளாக, பொன்னியின் செல்வன் கண்களில் கண்ணீர் பொங்க பூங்குழலியின் அன்பை சுவைத்தவராக காட்டப்படுகிறாள். சேனாதிபதியின் சொற்கள் காதில் ஊற்றிய ஈயத்துளிகளாக,ஓடக்காரப் பெண் தானே என்று குந்தவி தேவி ஏளனம் பேசி பொன்னியின் செல்வனை திருமணம் செய்ய விடாமல் தடுக்கிறாள். படகோட்டியாக பொன்னியின் செல்வனைக் காப்பாற்றுகிறாள். காவல் தெய்வமாய், யுகம் யுகமாய் பொன்னியின் செல்வனை அன்பு செய்பவளாக பூங்குழலி காட்டப் படுகிறாள்.; சுந்தரச் சோழ மன்னரிடம் அரசரைக் கொல்ல எறிந்த வேல் நள்ளிரவில் மந்தாகினிதேவியின் மார்பில் பாய்கிறது பூங்குழலி தடுக்க பாயும் முன் உயிர் போகிறது. பொறாமைஅற்றவளாக,. நன்றியுள்ளமும் அன்பில் ஆழமும் உடைய ஒரு சிறந்த சிங்கப்பெண்ணாக பூங்குழலி காட்டப்படுகிறாள்.சோழர் குல காவலியாக தன்னையே தியாகம் செய்தவளாக ஒவ்வொரு ஆணுக்குப் பின்னும் இருந்திருக்கிறாள் என்பது மிகையல்ல.

துணைநூற்கள்

1.அமரர் கல்கி,பொன்னியின் செல்வன் பாகம் -1,2,3,4,5
2.இலக்கியங்களில் பன்முகப் பார்வை கட்டுரைத் தொகுதி
3.தமிழிலக்கியத்தில் அறம் கட்டுரைத் தொகுதி. ப.11,62
4. திரு விவிலிலியம்,லூக்கா 10-27